**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 177** **நாள்: 06.12.2017**

## மேற்கு சைதாப்பேட்டை மயானபூமியில் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால், கண்ணம்மாபேட்டை அல்லது நெசப்பாக்கம் மயானபூமியை பயன்படுத்தி கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு–139ல் உள்ள மேற்கு சைதாப்பேட்டை மயானபூமியில் எரிவாயு தகனமேடையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இருப்பதால், அதனை சீர்செய்யும் பொருட்டு 10.12.2017 முதல் 10.01.2018 வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட உள்ளது.

மேலும், பராமரிப்பு பணி நடைபெறும் நாட்களில் அருகிலுள்ள கண்ணம்மாபேட்டை அல்லது நெசப்பாக்கம் மயானபூமியை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறும், பராமரிப்பு பணி நடைபெறும் 10.12.2017 முதல் 10.01.2018 வரையிலான நாட்களில் கண்ணம்மாபேட்டை சுகாதார ஆய்வாளரை 94450 25941 என்ற கைபேசி எண்ணிலும், நெசப்பாக்கம் சுகாதார ஆய்வாளரை 94450 25937 என்ற கைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**